Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Federal Department of Justice and Police FDJP

**Federal Office of Justice FOJ**
Private Law Division
Federal Civil Status Office FCSO

# சுவிற்ஸ்சலாந்தில் மண முடிப்பதற்குத் தேவையான உரிமைகளையும், கடமைகளையிட்டும் வழங்கும் தகவல் கையேடு

கீழே கொடுக்கப்பட்ட விளக்கங்கள் யாவும் சுவிற்ஸ்சலாந்தில் மணம் முடிப்பதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய தேவைகளாகும். இவை சட்டரீதியாகப் பொறுப்பற்றவையாகும். இப்பொழுதுள்ள சட்ட ஏற்பாடுகள் யாவும் பூரண அதிகாரத்திற்குட்பட்டவையாகும்.

பிறநாடுகளிலுள்ள சுவிஸ் பதிவாளர், காரியாலயங்கள், சுவிஸ் தூதரகங்கள் வழங்கும் இத்தகவல் கையேடுகளும் சிவில் அந்தஸ்த்துக்குரிய அரச காரியாலயங்களினால் ஆலோசனை வழங்குவதற்குத் தேவையற்றவை. ஆகையால் தயவு செய்து பிரத்தியேக, சட்ட ஆலோசனைகளை இக்கையேடு சம்பந்தமாகப் பெறுமாறு தெரிவிக்கப்படுகின்றது. (தகவல்மையம், சட்ட நிபுணர், நொத்தாரிஸ் ஆகியோர்)

**சுவிற்ஸ்சலாந்தில் நிலவும் மணமுடிப்பதற்குரிய உரிமைகளும் கடமைகளும்.**

சுவிஸ் சட்டத்திற்கமைய மேற்கொள்ள வேண்டிய உரிமைகளும், கடமைகளும் பின்வருமாறு. இவை உரிய முறையிலும் விபரமாகவும் கொடுப்படவில்லையென்பதைப் புரிந்து கொள்ளவும்.

- **ஆணோ, பெண்ணோ 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டதாயின் மாத்திரம் மணம் முடிக்கலாம்.** சுவிற்ஸ்சலாந்தில் சட்டரீதியான மணம் முடிப்பதற்குரிய ஆகக் குறைந்த வயது ஆண்களுக்கும், பெண்களுக்கும் 18 ஆகும். இரு பகுதியினரும் 18 வயது தாண்டியபின்னரே அவர்கள் மணம் முடிக்க முடியும்.

- **ஒவ்வொருவரும் சுயமாகவே தமது வாழ்க்கைத் துணையை / துணைவியை தெரிவு செய்யலாம். யாரும் யாரையும் மணம் முடிக்குமாறு கட்டாயப்படுத்த முடியாது.** இரு வாழ்க்கைத் துணைவர்களினதும், சுய விருப்பின் பேரிலேயே மணம்முடித்தலமையும். ஒருவரினது விருப்பமின்றி மற்றவர் மணம் முடிக்குமாறு கட்டாயப்படுத்த முடியாது.

- **விசுவாசமாகவும் உதவியாகவும் இருப்பதற்குரிய தேவைகள்.** இருதரத்தினரும், திருமணபந்தத்தில் இணைவதற்கு நம்பிக்கையும், மரியாதையும் ஒருவருக்கொருவர் பற்றியிருத்தல் வேண்டும். ஒருவருடைய விருப்புக்கு மாறாக மற்றவர் நடக்கக் கூடாது.

- **எல்லா விடயங்களிலும் ஆணுக்கும், பெண்ணுக்கும் சம உரிமையுண்டு.** கணவனுடன் மனைவிக்கு எல்லா விடயங்களிலும் தனது விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்த உரிமையுண்டு. அவரவரின் செயற்பாடு அவரவரின் செயற்பாட்டுடன் சமமான முக்கிய இடத்தைப் பெறும்.

- **மணவாழ்க்கையின் செயற்பாடுகளில் பொதுவான சம்மதம், (வெளி வேலைகளிலும், வீட்டு வேலைகளிலும்)** இரு வாழ்க்கைத் துணைவரும் சமமானவர்களாகையால் கடமைகளை நிறைவேற்றுவதில் பால் ஒரு காரணியாகாது. கடமையை நிறைவேற்றுவதில் இருபாலாரும் இணைந்து பகிர்ந்து கொள்ள வேண்டும்.

- **குடும்பம் நடத்துவதற்குரிய பொது நிதியம் வழங்கல்** குடும்ப வாழ்க்கையை நடத்துவதற்குரிய நிதிவசதியை இருபாலாருமே பால் வேற்றுமையில்லாமல் சமமாக ஒருமித்துப்பங்களிப்புச் செய்வது அவர்களது கடமையாகும். குடும்ப வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இருவரும் ஒற்றுமையாக பங்களிப்புச் செய்து நிறைவேற்றுவது இருவரினது பொறுப்பாகும்.

- **பிள்ளைகளினது பராமரிப்பு இருவரினது கூட்டுப்பொறுப்பு.** பிள்ளைகளினது பராமரிப்பு இருவரினதும் கூட்டுப் பொறுப்பாகும். எல்லாவித அச்சுறுத்தல்களிலிருந்தும் பாதுகாப்பதும், படிப்பிப்பதும் இருவரினதும் கூட்டுப் பொறுப்பாகும்.

- **மண வாழ்க்கை வன்முறையற்றது.** இரு வாழ்க்கைத் துணைவர்களும், ஒருவரையொருவர் தாக்கினாலோ, தூஷித்தாலோ, குற்றச் சாட்டுக்கு இலக்காவர். கணவனுக்கு மனைவியைத் தாக்கித் துன்புறுத்த உரிமையில்லை.

- **மணவாழ்க்கையில் ஒருவரையொருவர் மீறி நடப்பாராயின் நீதிமன்றப்பாதுகாப்புக்கோர உரிமையுண்டு.** குடும்ப வாழ்க்கைக்கேதுவாக ஒருவர் பொறுப்பற்று நடப்பாராயின் அல்லது குடும்ப வாழ்க்கையில் ஒருவரையொருவர் அனுசரிக்க முடியாவிடின் நீதிமன்றத் தலையீட்டை ஒருமித்தோ தனிமையாகவோ மத்தியட்சத்திற்குக் கோரமுடியும்.

**மணவிலக்கம் செய்வதற்கு ஒவ்வொரு வாழ்க்கைத் துணைக்கும் உரிமையுண்டு.** திருமண ஒப்பந்தம் மணவிலக்கால் கலைத்து விடமுடியும். இரு வாழ்க்கைத் துணைவர்களும் ஒருமித்து நீதிமன்றில் மணவிலக்குக் கோரலாம். ஒரு வாழ்க்கைத் துணை மாத்திரம் மணவிலக்கு வேண்டுமாயின் நீதிமன்றத்தில் தனியான மனு மூலம் கோரலாம்.